(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 6 (1).]

# பாராளுமன்றம்

## 6 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 மே 05 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2017 மே 23, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்,— வாழ்வின் எழுச்சி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க திருத்தஞ் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் மற்றும் அச்சட்டத்தின் 25(2) மற்றும் 29 (2) பிரிவுகளோடு சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 42 ஆம் பிரிவின் கீழ், சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 07 ஆம் திகதிய 2009/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட கட்டளை இல.32 ஆனது அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

### 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 32

2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை. அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் விற்பனை முற்பணக் கணக்கு — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| விடயம் | | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 4,000,000,000 இலிருந்து ரூபா. 5,615,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2016.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க, பா.உ.*
நிதி அமைச்சர்

2017.04.07 ஆந் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

*

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட கட்டளை இல. 33 ஆனது அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 33

2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) - இலங்கை கடற்படை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| விடயம் | | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 400,000,000 இலிருந்து ரூபா. 480,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 420,000,000 இலிருந்து ரூபா. 450,000,000 வரை |

| | | |
|---|---|---|
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 360,000,000 இலிருந்து ரூபா. 390,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2016.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க, பா.உ.*
நிதி அமைச்சர்

2017.04.07 ஆந் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

*

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட கட்டளை இல. 34 ஆனது அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 34

2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "விவசாயப் பண்ணை பராமரிப்பு விதைகள் விற்பனை முற்பணக் கணக்கு - கமத்தொழில் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | <u>விடயம்</u> | <u>திருத்தம்</u> |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 525,000,000 இலிருந்து ரூபா. 480,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2016.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க, பா.உ.*
நிதி அமைச்சர்

2017.04.07 ஆந் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

*

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு கீழே குறித்துரைக்கப்பட்ட கட்டளை இல. 35 ஆனது அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.35

2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரதக் களஞ்சியங்கள் முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 1,800,000,000 இலிருந்து ரூபா. 1,200,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2016.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க, பா.உ.*
நிதி அமைச்சர்

2017.04.07 ஆந் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

*

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட கட்டளை இல. 36 ஆனது அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 36

2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “அரசாங்க தொழிற்சாலைக் களஞ்சிய முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 150,000,000 இலிருந்து ரூபா. 80,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 150,000,000 இலிருந்து ரூபா. 80,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 65,000,000 வரை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2016.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க, பா.உ.*
நிதி அமைச்சர்

2017.04.07 ஆந் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

*

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட கட்டளை இல. 37 ஆனது அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “அரசாங்கத் தொழிற்சாலை பணிநிறைவு முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 300,000,000 இலிருந்து ரூபா. 315,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2016.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க, பா.உ.*
நிதி அமைச்சர்

2017.04.07 ஆந் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

*

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.7),— 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கட்டளை கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளை 2016.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

**அட்டவணை**

**(இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைவாக)**

**2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

நிதி ஆண்டு 2016 தொடர்பில், 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

**குழுத்தொடர் இலக்கம். 01**

2015 அம் ஆண்டின் 16 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00101, 00201, 00401, 10201, 10301, 11101, 11701, 11901, 12301, 12401, 13001, 16201, 19701, 19801, 21201, 22201, 22401, 22501, 22601, 23201, 24001, 24101, 24801, 28301, 28401, 29601, 30001, 30601, 32001, 33101 மற்றும் 33201 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்:-

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | செலவின இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரச செயற்பாட்டு வரவிற்கான ஆகக்குறைந்த எல்லைகள் | | IV அரச செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | அதிமேதகு ஜனாதிபதி | 00101 | 25,000,000 | 30,000,000 | - | - | - | - | 1 |
| 2. | பிரதம அமைச்சர் அலுவலகம் | 00201 | 10,000,000 | 14,000,000 | 6,000,000 | 7,000,000 | 36,000,000 | 38,000,000 | 2 |
| 3. | மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் | 00401 | - | - | 1,000,000 | 500,000 | - | - | 3 |
| 4. | நிதி அமைச்சு | 10201 | 16,000,000 | 19,000,000 | 9,500,000 | 10,500,000 | - | - | 4 |
| 5. | பாதுகாப்பு அமைச்சு | 10301 | 50,000,000 | 60,000,000 | 35,000,000 | 40,000,000 | - | - | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | 11101 | - | - | 1,100,000,000 | 1,065,000,000 | - | - | 6 |
| 7. | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 11701 | - | - | 10,000,000 | 8,000,000 | - | - | 7 |
| 8. | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு | 11901 | 5,000,000 | 8,000,000 | 1,800,000 | 2,400,000 | - | - | 8 |
| 9. | வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு | 12301 | - | - | 7,000,000 | 4,000,000 | - | - | 9 |
| 10. | சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு | 12401 | - | - | - | - | 33,000,000 | 48,000,000 | 10 |
| 11. | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 13001 | - | - | 32,000,000 | 24,000,000 | - | - | 11 |
| 12. | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு | 16201 | - | - | 4,000,000 | 3,500,000 | - | - | 12 |
| 13. | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சு | 19701 | - | - | 12,000,000 | 9,000,000 | - | - | 13 |
| 14. | நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சு | 19801 | 4,000,000 | 8,500,000 | 1,000,000 | 6,000,000 | 20,000,000 | 31,000,000 | 14 |
| 15. | பரீட்சைத் திணைக்களம் | 21201 | 23,000,000 | 23,010,000 | - | - | - | - | 15 |
| 16. | இலங்கைத் தரைப்படை | 22201 | 2,500,000,000 | 2,750,000,000 | 2,450,000,000 | 2,700,000,000 | - | - | 16 |
| 17. | இலங்கை வான்படை | 22401 | - | - | 475,000,000 | 460,000,000 | - | - | 17 |
| 18. | பொலிஸ் திணைக்களம் | 22501 | 1,900,000,000 | 1,200,000,000 | 1,450,000,000 | 1,350,000,000 | 4,000,000,000 | 2,000,000,000 | 18 |
| 19. | குடிவரவு, குடிவரவுத் திணைக்களம் | 22601 | 33,000,000 | 36,000,000 | 32,000,000 | 29,000,000 | - | - | 19 |
| 20. | சிறைச்சாலைகள் திணைக்களம் | 23201 | - | - | 130,000,000 | 125,000,000 | - | - | 20 |
| 21. | தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம் | 24001 | 5,000,000 | 7,000,000 | 4,000,000 | 5,000,000 | - | - | 21 |
| 22. | பொது முயற்சிகள் திணைக்களம் | 24101 | 4,000,000 | 4,350,000 | 2,000,000 | 2,300,000 | - | - | 22 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23. | மதுவரித் திணைக்களம் | 24801 | 32,000,000 | 38,000,000 | 25,000,000 | 30,000,000 | 170,000,000 | 171,000,000 | 23 |
| 24. | வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் | 28301 | 50,000,000 | 69,000,000 | - | - | 251,000,000 | 281,000,000 | 24 |
| 25. | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 28401 | 46,000,000 | 50,000,000 | 34,000,000 | 38,000,000 | 140,000,000 | 147,000,000 | 25 |
| 26. | இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 29601 | 5,000,000 | 5,126,196 | - | - | - | - | 26 |
| 27. | உணவு ஆணையாளர் திணைக்களம் | 30001 | - | - | 3,500,000 | 3,400,000 | - | - | 27 |
| 28. | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30601 | - | - | 350,000,000 | 300,000,000 | - | - | 28 |
| 29. | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 32001 | 920,000,000 | 400,000,000 | 530,000,000 | 285,000,000 | - | - | 29 |
| 30. | திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் | 33101 | 600,000,000 | 300,000,000 | 300,000,000 | 225,000,000 | - | - | 30 |
| 31. | தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம் | 33201 | - | - | - | - | 3,000,000 | 4,000,000 | 31 |
| | மொத்தம் | | **6,228,000,000** | **5,021,986,196** | **7,004,800,000** | **6,732,600,000** | **4,653,000,000** | **2,720,000,000** | |

2017 .04.07
கொழும்பு.

ஒப்பம்: ரவி கருணாநாயக்க, பா.உ.
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.*

# 2017 யூன் 21, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

697/ '16

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) அரக்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளவர்கள் தற்போது அக்கைத்தொழிலிலிருந்து விலகிச் செல்கின்றனர் என்பதையும்;

(ii) மூலப்பொருள் மற்றும் சந்தை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) இக்கைத்தொழிலானது இந்நாட்டுக்கு பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரக் கூடியதொன்றாகுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரக்கு சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி வருமானம் யாதென்பதையும்;

(iii) ஏற்றுமதி செய்யப்படுவதில்லையெனில், ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாட்டினுள் அரக்கு சார்ந்த கைத்தொழிலுக்கு தேவையான சந்தையை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

808/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது 1500 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் பொல்பித்திகம, இருதெனியாய குடியேற்றம் 1970 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் பயிர்செய்கைப் போராட்டத்தின் கீழ் குடியிருப்பாக ஆரம்பமானது என்பதையும்;

(ii) மேற்படி காணிகளின் சட்டபூர்வமான உரிமை குடியேற்றவாசிகளுக்கு இல்லாமையின் காரணமாக இவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) நிரந்தர வீடுகள், வீதிகள், பாடசாலைகள், கூட்டுறவு சங்கங்கள், சனசமூக மண்டபங்கள், மின்சாரம், சங்கங்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட அரசாங்க நிருவாக நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்ற இந்தக் குடியேற்றத்தின் காணிகளின் உரிமை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி அசௌகரியங்கள் காரணமாக சிலவேளை வனசீவராசிகள் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் குடியிருப்பாளர்களுக்கும் இடையே மோதல்கள்கூட உருவாகின்ற சூழலில் இந்தக் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. நாமல் கருணாரத்னவினால் 6 ஆவது பாராளுமன்றத்தின் வனசீவராசிகள் அமைச்சின் ஆலோசனைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி பிரச்சினைக்கு வழங்கப்பட்ட தீர்வு/ தீர்மானம் யாது என்பதையும்;

(iv) மேற்படி தீர்வு/தீர்மானத்திற்கு அமைய, இக்காணிகளை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1000/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2009 மே 19 ஆம் திகதியளவில் வட மாகாணத்தில் காணப்பட்ட தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை முகாம்களின் எண்ணிக்கை, இவற்றின் நிலப் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) 2015 சனவரி 08 ஆம் திகதியளவில் வட மாகாணத்தில் காணப்பட்ட தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை முகாம்களின் எண்ணிக்கை, இவற்றின் நிலப் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) 2016 செத்தெம்பர் 30 ஆம் திகதியளவில் வட மாகாணத்தில் காணப்பட்ட தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை முகாம்களின் எண்ணிக்கை, இவற்றின் நிலப் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1124/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஊவா மாகாணத்தில் தனியார் பேருந்துகளுக்காக வீதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அவ்விதமாக வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வீதிகள் யாவை;

(iii) அவ்விதமாக வீதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஆட்களின் பெயர்கள் யாவை;

(iv) அதற்காக கடைப்பிடித்த முறையியல்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1139/ '16

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் போது தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு ஒரே கொள்கை அமுல்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2016 ஆம் ஆண்டு மேல் மாகாண சபை பாடசாலைகளுக்கு ஆரம்ப நேர்முகப் பரீட்சையின் மூலம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள வெற்றிடங்களுக்கு (படைவீரர், அரசாங்க ஊழியர்கள்) மாணவர்களை அனுமதிக்கின்றபோது பின்பற்றப்பட்ட நடைமுறை யாது என்பதையும்;

(iii) எஞ்சியுள்ள வெற்றிடங்களுக்கு அனுமதிக்கும்போது மாகாண சபை உறுப்பினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் வீதம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள முறை நியாயமானதாயின், தேசிய பாடசாலைகளுக்கும் குறித்த முறை பின்பற்றப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேல் மாகாண சபையின் கீழ் காணப்படுகின்ற பிரபல்யமான பாடசாலைகளுக்கு மாத்திரம் மேலதிக வகுப்பறை ஒன்றையும், மாணவர்கள் 45 பேரையும் அனுமதிப்பதற்கான அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அதற்கு மாணவர்களை அனுமதிக்கும் முறையியல் யாது என்பதையும்;

(iv) மாணவர்களை அனுமதிக்கும்போது மேல் மாகாண சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பங்கீடு (உறுப்பினர் கோட்டா) வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1164/ ’16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியயேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், சம்பைமடு கிராம அலுவலர் பிரிவின் கற்பகபுரம் கிராம மக்கள் 1990 ஆம் ஆண்டில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தனரென்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டில் அவ்விதமாக இடம்பெயர்ந்தவர்களில் 130 குடும்பங்கள் எவ்விதமான அடிப்படை வசதிகளுமின்றி மீளக்குடியமர்த்தப்பட்டனர் என்பதையும்;

(iii) இற்றைவரை இவர்களுக்கு அரசாங்க நிவாரணங்களோ வீடமைப்புத் திட்டமோ கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த மக்களுக்கு வீடமைப்புத் திட்டமொன்றையும் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அவசியமான ஏனைய நிவாரணங்களையும் வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாவென்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1168/ '16

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நாவலபிட்டிய தேர்தல் ஆளுகைப் பிரதேசத்திற்கு சொந்தமான உலபனையில் அமைந்துள்ள கைத்தொழில்பேட்டையை ஆரம்பிப்பதற்காக கடந்த அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாது என்பதையும்;

(ii) அங்கு எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவந்தன என்பதையும்;

(iii) தற்போது மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழிற்பேட்டையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான புதிய வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1170/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 செத்தெம்பர் தொடக்கம் 2015 பெப்ருவரி வரையான காலப்பகுதியில் லங்கா சதொச மூலமாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு யாது;

(ii) இதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா;

(iii) ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் யாவை;

(iv) இறக்குமதி செய்த அரிசியை விடுவிப்பதற்கு மற்றும் தாமதக் கட்டணங்களுக்காக இலங்கைச் சுங்கத்திற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) ஒரு கிலோ அரிசியின் இறக்குமதி விலை மற்றும் விற்பனை விலை தனித்தனியாக யாது;

(vi) அதற்கிணங்க லங்கா சதொசவிற்கு நேர்ந்த நட்டம் யாது;

(vii) இந்த தொகையிலிருந்து விற்பனை செய்யப்பட்ட அரிசியின் அளவு யாது;

(viii) பழுதடைந்த அரிசியின் அளவு மற்றும் அரிசியை விலங்குணவாக விற்பனைசெய்ய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த திகதி யாது;

(ix) இவ்விதமாக விற்பனை செய்யப்பட்ட அரிசியின் அளவு, ஒரு கிலோ அரிசியின் விலை மற்றும் நேர்ந்த நட்டம் வெவ்வேறாக யாது;

(x) விலங்குணவாக மேற்படி பழுதடைந்த அரிசியை கொள்வனவு செய்த நிறுவனம் மற்றும் அளவு யாது;

(xi) அரிசி இறக்குமதி தொடக்கம் விற்பனை வரையான ஒட்டுமொத்தச் செயற்பாட்டினுள் லங்கா சதொச செலவிட்ட பணத்தொகை, ஈட்டிய பணத்தொகை மற்றும் நட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1178/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாண நகரத்தில் நிலவிய சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்வெண்ணிக்கையில் தமிழ் தொழில்முயற்சியாளர்களுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை யாது;

(iii) சிங்கள அல்லது வேறு இனப்பிரிவைச் சேர்ந்த ஆட்களுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை யாது;

(iv) அதன் முழுமையான அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 ஆம் ஆண்டில் தமிழ் மற்றும் சிங்கள தொழில்முயற்சியாளர்கள் பேணிவந்த தொழில்முற்சிகள் அனைத்தும் இன்றளவிலும் இயங்கிவருகின்றனவா;

(ii) இன்றேல் அத்தொழில்முயற்சிகளை பேணிவந்த ஆட்கள் அல்லது அவற்றின் பின்னுரித்தாளிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதும் வசித்து வருகிறார்களா;

(iii) ஆமெனில், அதன் முழுமையான அறிக்கையொன்றினை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1278/ '16

கௌரவ நளின் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015.10.01 ஆம் திகதியாகின்றபோது கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2016.06.11 ஆம் திகதியாகின்றபோது மேற்படி சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த நிலையான வைப்புக்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி சங்கத்திலிருந்து கடன் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளில், கடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் இற்றைவரை கடன் தொகை விடுவிக்கப்படாதுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள மொத்த கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு கடன் விடுவிக்கப்பட தாமதம் ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vii) மேற்படி சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு உரியவாறு கடன் தொகையை விடுவிப்பதற்கு இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(viii) ஆமெனில், மேற்படி சங்கத்தின் நிதி நிருவாகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1289/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதில், மிகவும் தீர்க்கமானதாக காணப்பட்ட அதிவேக நெடுஞ்சாலைகளை அமைத்தல் கடந்த அரசாங்கத்தின் முதனிலை அபிவிருத்தி மூலோபாயமாக இருந்தது என்பதையும்;

(ii) அதன்படி, நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மாத்தறை – பெலிஅத்த அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கு அவசியமான காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மாத்தறை, திஹகொட பிரிவில் இழப்பீடு மதிப்பீட்டின்போது காணி உரிமையாளர்களுக்கு ஒரு அநீதி நேர்ந்துள்ளது என்பதையும்;

(iv) இதன்போது அதிவேக நெடுஞ்சாலைக்கு பக்கத்தில் எஞ்சுகின்ற காணிகளின் பெறுமதி, நிலவும் பெறுமதிக்கு ஒப்பீட்டளவில் குறைவடைதல் விலைமதிப்பீடு செய்யப்படவில்லை என்பதையும்;

(v) ஆதனத்தின் ஒரு பகுதி மட்டும் சுவீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் எஞ்சும் பகுதி ஓரக்காணிகளாக மாறுவது கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதையும்;

(vi) வயற் காணிகளை சுவீகரிக்கும்போது கணிப்பிடப்பட்ட எதிர்கால தொழில் இழப்புகள், மேட்டு நில பயிர்ச் செய்கையின் பொருட்டு கணிப்பிடப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சாதாரண நெடுஞ்சாலையொன்று விஸ்தரிக்கப்படும்போது, பக்கத்திலுள்ள காணிகளின் பெறுமதி அதிகரிக்கின்ற போதிலும், அதிவேக நெடுஞ்சாலைகள் தொடர்பில் அவ்வாறு நடைபெறாமை குறித்து விசேடமாக ஆராயும் மாற்று இழப்பீடு மதிப்பீட்டு முறையொன்றின் அவசியத்தை ஏற்றுக்கொள்வாரா?

(ii) அதன்படி, திஹகொட, கப்புதூவ பிரதேசத்தில் ஆதனங்கள் மற்றும் பயிர்களை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1321/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.01.09 மற்றும் 2014.07.01 ஆகிய திகதிகளில் 03 வருடங்களுக்கு எனக் கூறி 175 பேரும், 2014.11.14 ஆம் திகதி கால வரையறையின்றி மேலும் 14 பேரும், 2016.10.20 ஆம் திகதி 02 பெண்கள் மற்றும் 03 ஆண்களும், பல்திறன் பயிலுனர்களாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) இவர்கள் ஒரு வருடத்திற்கு 07 அமய லீவுகளுக்கும், 14 சுகவீன லீவுகளுக்கும் உரித்துடையவர்களாவர் என அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அமைச்சரின் ஆலோசனையின் பேரில் 2015 யூலை மாதம் வாய்மூலப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டதென்பதையும்; இதில் 30 பேர் பங்கேற்றுள்ளார்கள் என்பதையும்; இவர்கள் தொழில்வாய்ப்புக்கான நேர்முகப்பரீட்சைக்கும் தோற்றுவிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) 2016.06.16 ஆம் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு அமைய, சகல வெற்றிடங்களும் பயிலுனர்களைக்கொண்டே நிரப்பப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவ்வாறு செய்யாது அமைச்சரினால் பாதுகாப்புப் பிரிவுக்கு 95 பேரும், பின்னர் 120 பேரும் மற்றும் அதன் பின்னர் மேலும் 600 பேரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வேலை உதவியாளர்/எழுதுவினைஞர் பதவி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1398/ ' 16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தின் 168 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், கறுவா பயிற்சி நிலையத்தை விஸ்தரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 50 மில்லியன் தொகை செலவிடப்பட்ட விதம் பற்றிய செலவு விபரத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்:

(iii) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள கறுவா பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(v) 2016 ஆம் ஆண்டில் கறுவா பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையும் பெயர்களும் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1586/ '17

கௌரவ சந்தித் சமரசிங்க,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை சப்ரகமுவ முதலமைச்சர் பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு வாகனத்தின் வகையும் இலக்கங்களும் யாவை என்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு வாகனத்தின் பராமரிப்புக்காக செலவிடப்பட்ட பணத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) முதலமைச்சர் வாகனங்களை தவறாக பயன்படுத்திய அமைச்சு இது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1146/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று ஓட்டமாவடி மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2017 யூன் 22, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

465/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (7)

(அ) (i) 2015 ஆம் ஆண்டினுள் சனாதிபதி அவர்கள் கலந்துகொண்ட வெளிநாட்டு பயணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திலும் கலந்துகொண்டவர்களின் பெயர், பதவி மற்றும் இந்நபர்களுக்காக அரச மற்றும் அரசுசார் நிறுவனங் களினால் ஏற்கப்பட்ட செலவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

952/ ’16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச ஊழியர்களுக்கு சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தபால்காரர்களும் மோட்டார் சைக்கிள்களைக் கோரியுள்ளார்கள் என்பதையும்;

(ii) இவர்களுக்கு இதுவரை மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களுக்கு சலுகை விலையில் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின், அது எத்திகதியிலிருந்து;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1019/ '16

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு.— (4)

(அ) (i) 2015 சனவரி மாதம் முதல் இற்றைவரையிலான காலப்பகுதியில் சனாதிபதி அவர்களினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட அரச மற்றும் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிர்மாணிப்புகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நிர்மாணிப்புகளில், 2015 சனவரி மாதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணிப்புகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1084/ '16

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ நாய்ப் பிரிவிலுள்ள நாய்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நாய்களைப் பராமரிப்பதற்கு ஆண்டொன்றில் செலவிடப்படும் பணத் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி நாய்களிலிருந்து பெறப்படும் பயன்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலிஸ் திணைக்களத்துக்கு வெளிநாடுகளிலிருந்து மேலும் நாய்களை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் பணத் தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1099/'16

கௌரவ அசோக்க பிரியந்த,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் உள்ள பல கிராமங்கள் கடலரிப்புக்கு உள்ளாகும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு கடலரிப்புக்கு உள்ளாகியுள்ள கிராமங்கள் மற்றும் மக்கள் சார்பாக ஏதேனும் நிவாரண வேலைத்திட்டமொன்று அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1119/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் சமுர்த்தி, முதியோர் கொடுப்பனவுகள் போன்ற பல்வேறு நிவாரணங்களை பெறுகின்ற ஆட்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக எதிர்வரும் காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1133/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) South Asian Institute of Technology and Medicine என்ற பெயரிலான நிறுவனமொன்றின் மூலம் இலங்கையில் தாதியர், சுகாதாரம், விஞ்ஞான அல்லது மருத்துவ பட்டங்களை வழங்குவதற்கு அமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iii) அமைச்சினால் இதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டமைக்கான கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) அமைச்சின் அங்கீகாரமின்றி, சுகாதார துறைக்குரிய பட்டங்களை வழங்கும் நிறுவனமொன்றை நடத்திச் செல்வது சட்டபூர்வமானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1180/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1293/ '16

கௌரவ டலஸ் அலஹப்பெரும,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் பயிரிடப்படுகின்ற வயற் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வயற் காணிகளுக்கு நீர் வழங்கப்படுகின்ற விதம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்ட நெல் விளைச்சல் ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள நெல் விளைச்சல் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1323/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக அமுல்படுத்தப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் விடயப் பொறுப்பு அமைச்சரினதும் அரசாங்கத்தினதும் பொறுப்பு யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரவு செலவுத்திட்ட சலுகைக் கொடுப்பனவான தனியார் துறை தொழிலாளர்களின் சம்பளத்திற்கு மாதாந்தம் ரூபா 2,500.00 ஐ சேர்ப்பதானது, கூட்டு ஒப்பந்தத்திற்கு அமைய பெருந்தோட்டத் தொழிலாளர்களின் மாதாந்த சம்பளத்தில் சேர்க்கப்படவில்லை என்பதையும்;

(ii) குறைந்தபட்சம் அடிப்படைச் சம்பளத்தை நாளொன்றுக்கு ரூபா 500.00 உடன் ரூபா 1,000.00 வரை அதிகரித்திருக்க வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) ஆமெனில், மேற்படி நிலைப்பாட்டில் இருந்தவாறு மேற்படி அதிகரிக்கப்பட்ட தொகையைச் செலுத்தாத முதலாளிமாருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) கூட்டு ஒப்பந்தம் ஒன்று உள்ள சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட வரவு செலவுத்திட்ட சலுகைக் கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருப்பது, கூட்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைகள், சலுகைக் கொடுப்பனவுச் சட்டத்தை விட அதிக நன்மை அளிப்பதாக உள்ள சந்தர்ப்பங்களில் ஆகும் என்பதை ஏற்றுக் கொள்வாரா;

(iii) இன்றேல், கூட்டு ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டமைக்கான காரணம் யாது;

(iv) இந்த ரூபா 2,500.00 கொடுப்பனவுக்கு சமமானதொரு தொகை ஏற்கனவே ஒருசில தனியார் தோட்ட நிருவாகிகளால் அவர்களின் தொழிலாளர்களுக்கு செலுத்தப்படுகின்றது என்பதை அறிவாரா;

(v) ஆமெனில், தோட்டக் கம்பனிகளால் இத்தொகையை செலுத்த முடியாதென அவர்கள் கூறுகின்ற கூற்றை ஏற்றுக் கொள்கின்றீரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1395/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 165 இலக்க மற்றும் 166 ஆம் இலக்க முன்மொழிவுகளுக்கமைய, 7வது நூற்றாண்டு வரையான நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள இலங்கையின் வாசனைத் திரவியங்களை உலகளாவிய ரீதியில் வணிகச் சின்னமாக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 150 மில்லியன் நிதி ஏற்பாடு செலவிடப்பட்ட விதம் தொடர்பான செலவு விபரம் ஒன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டில் மேற்படி முன்மொழிவுக்கமைய கறுவா, மிளகு, ஏலம் மற்றும் சாதிக்காய் ஆகியவற்றின் பயிர்ச் செய்கைக்காக தவணைக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தவணைக் குத்தகை பெறுநர்களின் பெயர் பட்டியலை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டில் மேற்படி பயிர்ச் செய்கைக்காக ஊக்குவிக்கப்பட்ட பிரதேச பெருந்தோட்டக் கம்பெனிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் கறுவா ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு செலவிடப்பட்ட விதம் பற்றி உறுதிசெய்யப்பட்ட செலவு விபரமொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1587/ '17

கௌரவ சந்தித் சமரசிங்க,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை சப்ரகமுவ மாகாணத்தின் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள பயணிகள் போக்குவரத்து உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த உரிமப் பத்திரங்களைப் பெற்ற நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) பயணிகள் போக்குவரத்து உரிமப் பத்திரங்கள் இன்றி சப்ரகமுவ மாகாணத்தில் பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடுகின்றன என்பதையும்;

(ii) அதன் மூலம் சப்ரகமுவ பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு பெரும் நட்டம் ஏற்படுகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இது தொடர்பாக அமைச்சு எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1599/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் காரணமாக மிகவும் பாரதூரமான வகையில் சுற்றாடல் மாசடைவதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தினால் ஏற்படும் பாதகமான வாயுக்களின் வெளியேற்றத்தை தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

(iii ) நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேறும் சாம்பலை முகாமைத்துவம் செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் சுற்றாடல் மாசடைதலைக் குறைப்பதற்காக இலங்கை மின்சார சபையினால் எதிர்காலத்தில் எவ்வளவு பணம் முதலீடு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1675/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2008 டிசம்பரில் மட்டக்களப்பு, கோப்பாய், கொட்டகலை ஆகிய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலிருந்து தமது பயிற்சியினை நிறைவு செய்ததன் பின்னர் வன்னி மாவட்ட பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை பயிற்சி நிறைவுபெற்றவுடன் உடனடியாக பரீட்சையை நடத்துகின்ற செயன்முறைக்கு முரணாக, 2009 ஏப்ரலில் பரீட்சைக்கு தோற்றும் படி கோரப்பட்ட பயிலுநர்களின் பெயர்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) அந்த மாவட்டத்தில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக அந்த பயிலுநர்களினால் அந்த மாவட்டத்திலிருந்து வெளியே வரமுடியாத நிலைமை காணப்பட்டது என்பதையும்;

(ii) இவர்கள் தமது கனிஷ்ட பிரிவினருடன் பரீட்சைக்கு தோற்றியதுடன் கனிஷ்டப் பிரிவினர் விடையளித்த அதே வினாக்களுக்கு இவர்களும் விடையளித்தனர் என்பதுடன், கனிஷ்ட பிரிவினருக்கு சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி 2009.08.01 எனவும் அதேவேளை இவர்களுக்கான சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி 2011.01.01 என மாறுபட்ட செல்லுபடியாகும் திகதிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) கனிஷ்டப் பிரிவினருக்கான சான்றிதழ் செல்லுபடியாகும் திகதியிலிருந்து இவர்களுக்கான சான்றிதழும் செல்லுபடியாகும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1086/ '16

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தரைப்படை, விமானப்படை மற்றும் கடற்படை ஆகிய முப்படைகளில் கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படும் நாய்களின் எண்ணிக்கை ஒவ்வொரு படையின்படி வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அந்த நாய்களைப் பராமரிப்பதற்கு செலவிடப்படும் பணத் தொகை ஒவ்வொரு படையின்படி வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி நாய்களிலிருந்து பெறப்படும் பயன்கள் ஒவ்வொரு படையின்படி வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி படைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து மேலும் நாய்களை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் பணத் தொகை ஒவ்வொரு படையின்படி வெவ்வேறாக எவ்வளவு ;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 யூன் 23, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1067/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மஹவையிலிருந்து வவுனியா வரையிலான புகையிரதப் பாதையை புனரமைப்பதற்கு அப்போதைய உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர் கௌரவ ரஞ்சித் மத்தும பண்டாரவினால் 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை நிருபமொன்று சமர்ப்பிக்கப்பட்டதென்பதையும்;

(ii) அதற்கேற்ப இலங்கை புகையிரத திணைக்களத்தினால் தண்டவாளங்களும் பாலங்களும் ஒவ்வொரு பகுதியாக இறக்குமதி செய்யப்பட்டு திணைக்களத் தினால் அல்லது உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் ஊடாக மேற்படி புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கள் கோரப்படாமல் இந்திய கைத்தொழிலாளர்களுக்கு புகையிரதப் பாதை புனரமைக்கப்படுவதை கைளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தீர்மானத்தின் மீது செல்வாக்கு செலுத்திய காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1087/ ’16

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) தரைப்படை, விமானப்படை மற்றும் கடற்படை ஆகிய முப்படைகளின் குதிரைப்படை பிரிவினுள் இருக்கின்ற குதிரைகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு படையின்படி தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி குதிரைகளை பராமரிக்க செலவிடப்படும் பணத் தொகை ஒவ்வொரு படையின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி குதிரைகளிடமிருந்து பெறப்படும் பயன்கள் ஒவ்வொரு படையின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி படைகளின் குதிரைப்படை பிரிவுக்கு மேலும் குதிரைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு படையின்படி தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1121/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் உயிர் பல்வகைமை நிறைந்த ஏராளமான நீரேந்து பிரதேசங்கள் பதுளை மாவட்டத்தினுள் அமைந்துள்ளன என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி இடங்கள் யாவை;

(iii) மேற்படி நீர் ஊற்றுக்களை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கும் பொருட்டு ஏதேனும் வேலைத்திட்டம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1135/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகமவில் நிர்மாணிக்கப்பட்ட களுத்துறை மாவட்ட விளையாட்டுத் தொகுதியின் நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை யாது என்பதையும்;

(iii) அதன் உள்ளக விளையாட்டு அரங்கு, ஓடுபாதை மற்றும் நீச்சல் தடாகத்தை நிர்மாணிக்க செலவான பணத் தொகை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) இதனைத் திறந்துவைப்பது தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) அதன் பராமரிப்புப் பணிகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1182/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1291/ '16

கௌரவ டலஸ் அலஹப்பெரும,— நீர்ப்பாசன மற்றும் நீர் வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் உள்ள மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் சொந்தமான நீர்ப்பாசன திட்டங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசன திட்டங்களின் மூலம் பயிர்ச் செய்கை செய்யப்படுகின்ற மொத்த வயற் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வயற் காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மத்திய அரசாங்கத்துக்கு சொந்தமான நீர்ப்பாசன திட்டங்களை பராமரிப்பதற்கு அல்லது புனரமைப்பதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை;

(ii) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்துக்குரிய நீர்ப்பாசன திட்டங்களை பராமரிப்பதற்கு அல்லது புனரமைப்புக்கு செலவிடப்பட்ட பணத் தொகை;

ஒவ்வொரு ஆண்டுக்கமைய வெவ்வேறாக யாதென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1396/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 161 ஆம் இலக்க முன்மொழிவின்படி, வணிக ரீதியாக பாக்கு பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காக அந்த ஆண்டில் கடைப்பிடிக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவின்படி தாபிக்கப்பட்டுள்ள பாக்கு சேகரிப்பு வலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி வலையங்கள் தாபிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iv) 1977ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டுவரை இலங்கையில் பாக்கு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பாக்கின் அளவு, விலை மற்றும் மொத்தப் பெறுமதி உள்ளடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) இலங்கையில் வணிக ரீதியாக பாக்கு பயிர்ச் செய்கைக்காக நிச்சயிக்கப்பட்ட ஒரு திட்டம் உள்ளதா என்பதையும்;

(vi) அவ்வாறான திட்டமொன்றை அமைத்தல் தொடர்பில் பொறுப்பேற்க வேண்டிய அமைச்சு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1484/ '16

கௌரவ அசோக பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் வடமேல் மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்பட்ட பாடசாலைகளில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையின் பெயர் மற்றும் பாடசாலை அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி மாகாண பாடசாலைகள் மூடப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இப்பாடசாலைகளுக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் காணிகள் தற்சமயம் பயனுறுதியான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1600/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை அனல் மின்நிலையத்திலுள்ள மின் சக்தி நிலையங்கள் மூன்றினதும் ஆயுட் காலம் முடிவடையும் ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி மின்சக்தி நிலையங்களின் ஆயுட்காலம் முடிந்த பின்னர் அந்த மூன்று மின்சக்தி நிலையங்களிலிருந்தும் பெறப்பட்ட மின்வலுவை பெற்றுக்கொள்ளும் மாற்று வழிமுறை யாது என்பதையும்;

(iii ) மேற்படி மின்சக்தி நிலையங்களில் அடிக்கடி ஏற்படுகின்ற தொழில்நுட்ப நெருக்கடிகளை ஆராயும் போது உரிய காலத்திற்கு முன்னர் அந்த மின்சக்தி நிலையங்களை மூடிவிடுவதால் ஏற்படக்கூடிய நிலைமை தொடர்பில் நீண்டகால மின் பிறப்பாக்கத் திட்டங்களை தயாரிக்கும் திட்ட வகுப்பாளர்களின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1183/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1295/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் காணப்படும் அரச காணிகளின் அளவு எவ்வளவு;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மாத்தறை மாவட்டத்தில் குடியமர்வதற்காக பகிர்ந்தளிப்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள அரச காணிகளின் அளவு எவ்வளவு;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் குடியமர்வதற்கு காணிகள் அற்ற மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அத் திகதி யாது;

(iii) இது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற அல்லது நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1329/ '16

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.எல். ஹோல்டிங்ஸ் (பிறை) லிமிடெட் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு பங்கு வழங்கும் போது இடம்பெற்றுள்ள முறைகேடுகள் மற்றும் அந்நிறுவனத்தின் ஊழல் மோசடிகள் பற்றி நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு ACC/FC/2015/403 இலக்கத்தின் கீழ் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இற்றைவரை அது பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) அதனால் அதன் ஊழியர்களைப் போன்றே நாட்டுக்கும் பாரியளவு நிதிசார் நட்டம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த முறைப்பாட்டை விசாரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1677/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனை மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளின் பெயர்களை வகுதி ரீதியாக ஒவ்வொரு பாடசாலையிலுமுள்ள ஆசிரியர்கள் பதவியணி மற்றும் தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை என்பவற்றுடனும்;

(ii) இந்த கிராமப்புற ஏழை மாணவர்களின் இலவசக் கல்விக்கான சம உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அண்மையிலுள்ள கல்வி வலயங்களிலுள்ள மேலதிக ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கு கிழக்கு மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1397/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 162 ஆம் இலக்க முன்மொழிவுக்கமைய தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆராய்ச்சித் துறைக்கென ஒதுக்கப்பட்ட ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்படி மூன்று ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட விகிதாசாரம் யாதென்பதையும்;

(ii) தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிறுவனத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) 2002, 2005, 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தேயிலை ஆராய்ச்சி, இறப்பர் ஆராய்ச்சி மற்றும் தெங்கு ஆராய்ச்சிக்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) கடந்த ஒரு தசாப்த காலப்பகுதியில் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆகிய மூன்று துறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1468/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இந்தக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் வழங்கப்பட்ட நிதியின் அளவு வெவ்வோறக எவ்வளவு என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படிக் கருத்திட்டங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?